# கட்டவிழ்ப்புவாதமும் கூத்துக்கலை மரபும் : மட்டக்களப்பு மண்முனைமேற்கு பிரதேச நாட்டுக்கூத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**டேனிஷா, ச., நிரோசன், சி.**
மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
denishanmugam@gmail.com

*இவ் ஆய்வானது பின்நவீனத்துவ சிந்தனையாளரான டெரிடாவின் கட்டவிழ்ப்பு வாத சிந்தனைகள் பழந்தமிழ் மரபியல் சார்ந்த நாடகக்கலையான கூத்துக்கலையில் பிரதிபலித்துக் காணப்படுகின்றதா? என்பதனையும் மற்றும் இச்சிந்தனை கூத்துக்கலைக்கு அவசியமானதா? என்பதனையும் பகுப்பாய்வு செய்வதாக அமைகின்றது. ஏற்கனவே அனைவராலும் பழக்கப்பட்ட, நியமிக்கப் பட்ட, மரபுவழியான சிந்தனைகளிலிருந்து விடுபட்டு புதிய கருத்தாக்கம் நோக்கி அழைத்துச் செல்லும் ஒரு சிந்தனையாக, மரபாக டெரிடாவின் கட்டவிழ்ப்புச் சிந்தனை அமைகிறது. இக் கட்டவிழ்ப்புவாதமானது பெருங்கதையாடல்களை நிராகரித்தல், வாசகனை முதன்மைப் படுத்திய சிந்தனை, இரட்டை எதிர்நிலைகளினை நிராகரிக்கின்ற போக்கு, விளிம்புநிலைக் கருத்துக்கள் மீது கவனம் செலுத்துதல், குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்குமான உறவு மாறக் கூடிய தன்மை, மீள்வாசிப்பிற்கு உட்படுத்தல், பாரம்பரியத்தினை சிதைவாக்கல் போன்ற பண்புகளைக் கொண்டதாக விளங்குகின்றது. கூத்துக்கலையானது பாரம்பரியமாக அதனுடைய ஒவ்வொரு அம்சங்களிலும் பல்வேறு கட்டுக்களைக் கொண்டதாகக் காணப்படு கின்றது. குறிப்பாக அரங்க அமைப்பு, ஆடை அணிகலன், ஒப்பனை, ஒளியமைப்பு, ஆட்ட முறை, ஆயுதங்கள் போன்ற கூத்தின் ஒவ்வொரு அம்சமும் இத்தகைய கட்டுக்களைக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைய காலகட்டத்தில் கூத்தினுடைய போக்கினை, அது தொடர்பான கூத்துக் கலைஞர்களுடைய நிலைப்பாட்டினையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்து கின்ற போது கூத்தினுடைய ஒவ்வொரு கூறுகளும் கட்டவிழ்ப்பினுடைய பண்புகளை உள்வாங்கியிருப்பதனை கண்டுகொள்ளலாம். இதனை வெளிக்கொணர்வதாக இவ் ஆய்வு அமைகின்றது. எனவே இன்றைய காலகட்டத்தில் மருவிவரும் கலைகளில் ஒன்றான இக்கூத்துக்கலை கட்டவிழ்ப்பினுள் உள்வாங்கப்பட்டுள்ள தன்மையை, மீள்வாசிப்பு செய்யப் பட்டுள்ளமையையும் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் நாட்டுக்கூத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குவதாக இவ் ஆய்வு அமைகிறது. இவ் ஆய்விற்கான தரவு களாக முதலாம்நிலைத் தரவு, இரண்டாம்நிலைத் தரவு என்பன சேகரிக்கப்பட்டன. அந்த அடிப்படையில் முதலாம்நிலைத் தரவுகள் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் சில கூத்துக்கலைஞர்களின் நேர்காணல் வாயிலாகவும், இரண்டாம்நிலைத் தரவுகள் பின்னவீனத்துவத்தில் கட்டவிழ்ப்பு சிந்தனை மற்றும் நாடக அரங்கியல் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வேடுகள் வாயிலாகவும் சேகரிக்கப்பட்டன. மேலும் இவ் ஆய்வில் பகுப்பாய்வு முறை, விபரண முறை, வரலாற்று முறை, ஒப்பிட்டாய்வு முறை போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** அண்ணாவியார், பாரம்பரியம், மீள்வாசிப்பு, சிதைவாக்கல், களரி.